பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்

கோட்டப் பொறியாளர் , தேசிய நெடுஞ்சாலை கோட்டம் தஞ்சாவூர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்: திரு.சி.சக்திவேல், எம்.இ.,

செ.மு.க.எண்: டி.ஆர்.பி.100/2023-24/ வஅ/நாள்.29.01.2024

பொருள்: தஞ்சாவூர்தேசியநெடுஞ்சாலை கோட்டம் விக்கரவாண்டி – கும்பகோணம் – தஞ்சாவூர் தே.நெ.எண்.45சி (புதிய எண்.36)–இல் புதுப்பித்தல் கி.மீ.142/400 – 146/0 இல் பண்டாரவாடை கிராமத்தில் 11 KV வல்லத்தூர் பீடரில் உயர்/ தாழ் வழுத்தமின் கம்பிகள்/ கம்பம் மாற்றியமைத்தல் பணி வேலை உத்தரவு வழங்குதல் தொடர்பாக.

பார்வை:
1. ஒப்பந்த புள்ளி அறிவிப்பு எண் 06/ 2023/2024/ நாள் 29.12.2023
2. கோட்டப்பொறியாளர் (தே,நெ) தஞ்சாவூர் க.எண்,100/2023.–2024/ நாள் 22.01.2024
3. தங்களது விலைக்குறைப்பு கடிதம், நாள்:29.01.2024

உத்தரவு.

மேற்கண்ட பொருளில் காணும் பணிக்கான தங்களுடைய (திரு.கிரிப்பர்ஸ் இன்ஜினியரிங் கான்ட்ராக்டர்) விலை குறைப்பு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி 0.96 விழுக்காடு மதிப்பீட்டு விலை 2023-2024க்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.616224/.(ரூபாய் ஆறு இலட்சத்து பதினாராயிரத்து இருநூற்றுஇருபத்தி நான்கு மட்டும்)(அடிப்படை மதிப்பு ரூ 616224/.0 சரக்கு மற்றும் சேவை வரி நீங்கலாக) ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மொத்தப் பிணை வைப்புத்தொகை | ரூ . 14600.00 |
| முன்வைப்புத்தொகை | – (–)ரூ. 6300.00 |
| | ------------- |
| மீதம் முள்ள பிணைவைப்புத்தொகை | ரூ. 8300.00 |
| | ------------ |

தங்களால் செலுத்தப்பட்ட முன்வைப்புத்தொகை ரூ.6300/– செல்லத்தக்கவகையில் உள்ளதால் மீதமுள்ள பிணைவைப்புத்தொகை ரூ8300/– (ரூபாய் எட்டு ஆயிரத்து முந்நூறு மட்டும் ) கோட்டப்பொறியாளர் (தே,நெ) தஞ்சாவூர் அவர்களது பதவியின் பெயரில் ஈடு செய்யப்பட்ட அஞ்சலக வைப்பு தொகையாகவோ, வங்கி வைப்புத் தொகையாகவோ தேசிய சேமிப்பு பத்திரமாகவோ, ஒப்பந்தப்பத்திரத்தில் கையொப்பமிட வரும்போதுசெலுத்தப்பட வேண்டும்.

இவ்வாண்டிற்கு செல்லதக்கவகையில் வருமான வரி,சரக்கு மற்றும் சேவை வரி சான்றிதழ்கள் , தங்கள் ஒப்பந்தப்பதிவு புதுப்பிக்கப்பட்ட நகல் மற்றும் இப்பணிக்காக கீழ்க்கண்டவாறு தேவைப்படும் நியமனம் செய்ய குறிப்பிடப்பட்டுள்ள தொழில் நுட்ப உதவியாளர்களது புகைப்படம் ஒட்டிய இசைவுக்கடிதம் மற்றும் அவர்களது கல்விச்சான்றின் சான்றொப்பமிட்ட நகல்களுடன் இக்கடிதம் கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் கோட்டப்பொறியாளர், தேசியநெடுஞ்சாலை, தஞ்சாவூர் அலுவலகத்திற்கு அலுவலக நேரத்தில் இத்துறை ஒப்பந்தப்பத்திரத்தில் கையொப்பமிடஒரு அறிமுகமான சாட்சியுடன் வரும்படிக்கேட்டுக்கொள்ளப்படுகிறது.
தொழில் நுட்ப உதவியாளர்கள்.

1.பி.இ எலக்ட்ரிக்கல் பட்டம் பெற்று உள்ளவர் .–1 எண்ணிக்கை.

மேற்கொள்ளப்படும் இவ்வொப்பந்தம் தங்களுக்கும் அரசுக்கும் இடையே உரிமைகளை நிலைநாட்டுவதற்கான அடிப்படையாகும். தங்களால் முதலில் ஒப்பந்தப்பத்திரத்தில் கையொப்பமிட்ட பின்பே, ஆளுநருக்காகவும் அவருடைய சார்பாகவும் அனுமதிக்கப்பட்ட அலுவலர் கையொப்பமிடுவார்.அதன் பின்னரே ஒப்பந்தம் பூர்த்தியாவதாக கொள்ளப்படும்.

தாங்கள் குறித்தகாலத்திற்குள் இவ்வலுவலகத்திற்கு வந்து உடன்படிக்கையில் கையொப்பமிடத் தவறினால் தமிழ்நாடு நெடுஞ்சாலை கட்டளை கொத்து தொகுதி–1, பத்தி 104–05 ன்படி தங்களுக்கு வழங்கப்பட்ட வேலை உத்தரவு ரத்து செய்யப்பட்டு தங்களால் இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளியுடன் செலுத்திய முன்வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கோட்டப் பொறியாளர்,
தேசிய நெடுஞ்சாலை,
தஞ்சாவூர்

பெறுநர்
M/s. CREEPERS ENGINEERING CONTRACTOR,
No.3/39, Teachers Colony, Lalgudi,
Trichy - 621 601.

நகல் : உதவிக் கோட்டப் பொறியாளர் தேசிய நெடுஞ்சாலை புதுக்கோட்டை.
நகல் : உதவிப் பொறியாளர் தேசிய நெடுஞ்சாலை, திருவையாறு.

Signature Not Verified
Digitally signed by S SAKTHIVEL
Date: 2024.04.02 15:32:44 IST
Location: eProcure-EPROC